DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC–115/2021

Prosecution witness – PW 2

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.சகுபர்சாதிக் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A1 , A3 present. A2 , A4, A5 dispensed with by Hon'ble High Court)
24.06.2025– 03.25 PM

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் வாலிநோக்கத்தில் குடியிருந்து பேக்கரியில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி. எதிரிகளை தெரியும். எனது பக்கத்து வீட்டில் வசித்து வருகிறார்கள்.

2. எங்களுக்கும் எதிரிகள் தரப்பினருக்கும் வீட்டின் அருகே சந்து பிரச்சனை இருந்து வந்தது. கடந்த 30.01.2021 ந் தேதி மாலை சுமார் 06.00 மணியளவில் நான் எனது வீட்டிற்கு எனது மகனை பார்ப்பதற்காக சென்றேன். நான் செல்லும் போது பாட்டு கேட்டும் ஊப்பர் ஒன்றையும் வாங்கி சென்றேன். நானும், எனது மகனும் எனது வீட்டின் வாசலில் அமர்ந்து பாட்டு கேட்டுக்கொண்டிந்தோம். எனது மனைவி தண்ணீர் பிடிப்பதற்காக வெளியில் சென்றுவிட்டார்.

3. அப்போது அலாவுதீன், சலாவுதீன், பாசீத் வந்தார்கள் என்னை பார்த்து தேவிடியா மகனே, புண்டா மகனே பாட்டு கேட்கிறாய் என்று அசிங்கமாக பேசினார்கள். எதிரிகள் மூவரும் வீட்டிற்குள் நுழைந்து கட்டை கம்பால் என்னை நெஞ்சில் ஏறி என்னை அடித்தார்கள். என்னை கீழே தள்ளிவிட்டு காலால் மிதித்தார்கள். சம்பவம் நடக்கும் போது எனது மனைவி வீட்டிற்குள் வந்துவிட்டார். சண்டையை எனது மனைவி

விலக்கிவிட்டபோது அலாவுதீன் என்பவர் எனது மனைவியின் நெஞ்சில் காலால் மிதித்தார்.

4. நான் சத்தம் போடவும் எனது மனைவியும் சத்தம் போட ஆரம்பித்துவிட்டார். சுலைகா மற்றும் சபியா ஆகியோர் எனது மனைவியை விலக்குமாரால் அடித்தார்கள். அந்த வழியாக சென்ற நூர்முகமது மற்றும் அலிகான் ஆகியோர் சண்டையை விலக்கிவிட்டார்கள். எதிரிகள் எங்களை அடித்து விட்டு அங்கிருந்து சென்றுவிட்டார்கள். காயம்பட்ட நானும், எனது மனைவியும் கீழக்கரை அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அப்போது கொரனா காலம் என்பதால் மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கவில்லை. எங்களுக்கு மாத்திரை மற்றும் ஊசிபோட்டு அனுப்பி வைத்தார்கள். எனது மனைவி மறுநாள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>

1. நான் முதல் விசாரணையில் கூறிய விவரத்தைத்தான், போலிசார் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். போலிசார் விசாரிக்கும் போது அலாவுதீன் காலால் மிதித்ததாகவும், தலையில் அடித்ததாகவும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு வெளிப்புற காயம் எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் கீழக்கரை அரசு மருத்துவமனைக்கு எப்போது சென்றேன் என்றால் சம்பவம் நடந்த மறுநாள் காலை 09.00 மணிக்கு சென்றேன்.

2. கீழக்கரை மருத்துவமனையில் மருத்துவர் என்னை விசாரித்தார். மருத்துவர் விசாரித்த போது என்னை கம்பு மற்றும் கட்டை, விலக்குமாரால் அடித்தில் நெஞ்சு மற்றும் முதுகில் வலி இருப்பதாக

கூறினேன். எனது மனைவியை யார் அடித்தார் என்றால் எதிரிகள் ஐந்து பேரும் சேர்த்து கம்பால் அடித்தார்கள். எனது மனைவிக்கு தலையில் ஊமைக்காயம் ஏற்பட்டது. இடுப்பில் வலி இருந்ததாக சொன்னார்.

3. ஐந்து எதிரிகளும் எனது மனைவியை விலக்கமாரால் தலை மற்றும் கழுத்தில் அடித்தார்கள் என்றால் சரிதான். எனது மனைவி எப்போது புகார் கொடுத்தார் என்றால் சம்பவத்திற்கு மறுநாள் கொடுத்தார். அதன் பிறகு 24.07.2021ம் தேதி ஒரு புகார் மனு கொடுத்தார். போலிசார் என்னை எப்போது எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் கீழக்கரை அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். அதன் பிறகு என்னை போலிசார் விசாரிக்கவில்லை. இரண்டு புகார் மனுக்களும் ஓரே மாதிரி புகார் என்றால் சரிதான்.

4. எதிரிகள் எங்கள் மீது புகார் கொடுத்து அது சம்பந்தமாக ஜமாத்தில் பேசி சமாதானமாக சென்றோம் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் இடப்பிரச்சனை மனதில் வைத்து எதிரிகளுக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்து சுமார் 40 நிமிடம் கழித்துதான் சாட்சிகள் அலிகான் மற்றும் நூர்முகமது வந்தார்கள் என்றால் சரிதான். வந்து விலக்கிவிட்டார்கள்.

5. 05.07.2021ம் தேதி எதிரிகளுக்கு எதிராக எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நடந்த சம்பவத்திற்கு மூன்று தேதிகளில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் முன்பகையை மனதில் வைத்துக்கொண்டு பொய்யாக எதிரிகள் மீது புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மனைவியை வைத்து

எதிரிகளுக்கு எதிராக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி